CENTER FOR BHARATHIDASAN STUDIES
000558
LIBRARY
BHARATHIDASAN UNIVERSITY

# கேட்டலும் கிளத்தலும்

# கேட்டலும் கிளத்தலும்

**வள்ளுவர் உள்ளம் :**

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

இக் குறளின் கருத்து என்ன?

அரசன் முறை தவறாக நடப்பானாயின், நீர்த் தேக்கங்கள் சீர்கேடு அடையும் காரணத்தால், அந் நீர்த்தேக்கங்கள் வானம் பெய்வதைத் தேக்கி வையா-என்பது.

பரிமேலழகர், அரசன் முறை தவறாக நடந்தால் மழை பெய்யாது என்று பொருள் கூறுகிறாரே என்றால் அது பொருந்தாது என்றுதான் நாம் கருதுகின்றோம்.

நாம் கூறும் பொருளே பொருந்துவதாகும்.

கேள்வி கேட்ட தமிழ்ப் புலவர்க்கு ஒன்று சொல்ல விரும்புகிறோம்.

திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் என்ற நம் உரை அச்சாகி வருகிறது. மேலே புலவரால் கேட்கப்பட்டது போன்ற மிகுப்பல குறட்பாக்களுக்கு அதில் பொருள் கிடைக்கும்.

அச்சாகி வருவதற்குள் தனித்தனியே இப்படி பொருள் கூறும்படி கேளாதிருக்க வேண்டுகிறேன்.

குயில் 1–6–58

## (கேள்வியும் விடையும்)

கேள்வி: சர்வகலாசாலைஎன்பதுவடமொழித் தொடர். இதைத்தான் தமிழர்கள் கல்லூரி என்று சொல்லித் திரிகிறார்கள் என்று என் பார்ப்பன நண்பர்கள் சொல்லுகிறார்கள். எப்படி?

விடை: கலாசாலை என்பது கலப்பில்லாத வடமொழி சொற்றொடரா என்பதும் ஆராய்ச்சிக் குரியது...கல்லூரி என்பது பற்றி பார்ப்பனர்கள் கருத்துரைத்தார்கள் எனில், அவர்கட்கும் தமிழுக் கும் என்ன தொடர்பிருக்க முடியும். தமிழாராய்ச்சி யேனும் அவர்கட்கு இருக்குமா என்று நாம் கருதிப் பார்த்து, அவர்...என்று தள்ள வேண்டும்.

ஈண்டு நாம் எடுத்துக்காட்டும் செய்யுளைக் காண்க.

தற்காலம் கல்லூரிநற் கொட்டிலா
தடத்திடை மொய்எருக் குப்பையா
. . . என்னுயி ராஎய்து கற்குமால்
...க்கும் வெஞ்சரம் ஐந்துடை யானரோ

சிந்தாமணிச் செய்யுளில், கல்லூரி...இடம் என்று பொருள் தரல் காண்க.

குரல்-1 குயில் 8-6-58 இசை

* * *

கேள்வி: அடிகள் என்று பெரியோர்களையும் கடவுளரையும் சொல்லுகிறார்கள். ஒன்றும் விளங் கவேயில்லை. விளக்க வேண்டுகிறேன்.

விடை: தோழருக்கு மட்டுமா விளங்காமலி ருக்கிறது. தமிழ்ப் புலமைமிக்க புலவர் பலர்க்கு விளங்கவில்லை என்று நினைக்க வேண்டியதாகிறது.

அடிதாள் என்பன ஒரு பொருட்சொற்கள். அடி, தாள் என்றால் மக்கள் உறுப்பாகிய காலையே குறிப்பதாகக் கொள்ளக்கூடாது. வேறு பொருளும் உண்டு. அதுதான் "தத்துவம்" என்பது.

இனி, அடிகளே என்று பெரியோர்களைச் சொன்னால், தத்துவ உணர்வு உடையவரே என்று பொருள். அடிகளே என்று கடவுளைக் கூறினால் தத்துவனே என்று பொருள்.

அடிகள் என்னும் வழக்குத் திருவாரூர்க் கபிலர் தொகுத்த எண்ணூல், அதாவது, சாங்கிய நூல் வழக்கு.

அனைத்தும் இருபத்தைந்து தத்துவத்துள் அடங்கின என்று சாங்கிய நூல் சாற்றுகின்றது. அதுவேயுமன்றி, அனைத்தும் இருபத்தைந்து தத்துவமாம் என்றுணர்ந்த நிலையே விடுதலை என்றும் அச் சாங்கிய நூல் உறுதி செய்கின்றது.

அடிகள் என்ற சொல் சமண் சமயத்தாருடையது என்றும், சைவ சமயத்தாருடையது என்றும் கூறிக் கொள்வது பொருத்தமன்று.

திருக்குறளில் தாள் என்றும் அடி என்றும் வருமிடங்களில் இவ்வாறே பொருள் காண வேண்டும்.

திருக்குறள் மடத்துப் பதிப்பில் நற்றாள் என்பது சிவ பெருமான் சீபாதம் என்று பொருள் சொல்லப்பட்டிருப்பதும் கலப்பற்ற பிழையேயாம்.

திருக்குறளில் அடி என்றும் தாள் என்றும் வந்துள்ளதால், திருவள்ளுவர் உருவ வணக்கத்தை ஒப்புகின்றார் என்று வேறு சிலர் எண்ணுகிறார்கள் அதுவும் மேற்கூறியவாறு பிழையே யாம்.

''ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயப்ப
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.''

என உருவ வணக்கத்தை...வள்ளுவரே அதை ஏற்பாரா? ஏற்கமாட்டார்.

இனித் தத்துவம் என்ற சொற்பற்றி கூறுவோம்.

தத்துவம் வடமொழியன்று.. தன் ...அடியாகிய தன் துவம் பெற்று வடமொழி செய்கைக்கு உட்பட்டது. துவம் நீக்கி என்று சொன்னாலே தத்துவம் அடி தாள் சொன்னதே யாகும் என அறிதல் வேண்டும். தத்துவம் என்ற சொல்லுக்கு நாம் கொள்ளும் பொருளை வடசொல் கொள்ள வில்லை என்று ஆராயற்பாலது.

குரல்-2 குயில் 17-6-58 இசை : 3

* * *

கேள்வி : காரியம், காரணம், சலம், மனம், தாமரை இவை போன்ற சொற்கள்; இலக்கண வாயிலாகத் தமிழ்ச் சொற்களே என்று நீங்கள் 'வந்தவர் மொழியா செந்தமிழ்ச் செல்வமா?' என்ற தலைப்பின்கீழ் விளக்கி உள்ளீர்கள். இவை வடசொற்கள் என்று பேராசிரியர் அ. கி. பரந்தாமனார், 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா' என்ற தம் நூலில் சொல்லுகின்றார்.

பதில் : பேராசிரியர் பரந்தாமனார், நான், வந்தவர் மொழியா வெளியிடுவதற்கு முன்னமே எழுதிவிட்டார். இல்லையானால் அச்சொற்கள் வடசொற்கள் என்பதைக் காரணத்தோடு விளக்கியிருப்பார் அல்லவா?

இங்கு (சிங்கப்பூரில்) ஆரியர் ஒருவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "இந்தியன் மூவி நியூஸ்" என்னும் திரைப்பட திங்களிதழில் அவ்வாசிரியர் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் வடசொற்களாகவே பெய்து வைக்கிறார்.

இரா. கணபதி,
14, கம்போங்லாமா தெரு, சிங்கப்பூர்

உப்பொடு நெய், பால், தயிர், காயம் பெய்து அடினும் கைப்புறா பேய்ச் சுரையின் காய். தமிழரைப் பற்றியுள்ள இந்த நோயைத் தீர்க்கும் மருந்து பெரியாரிடந்தான் இருக்கிறது. உங்கள் ஒத்துழைப்பே இதற்கு விலை.

* * * *

கேள்வி : சூக, த்யூத என்பதின் திரிபென்றும், விஞ்சை, விந்த்யா என்பதன் திரிபென்றும் வையாபுரியார் சொல்லியுள்ளார். எப்படி?

கி. அறிவழகன், மூக்கன், வேலூர்.

பதில் : வையாபுரியார், தமிழே ஆரியத்தினின்று பிறந்தது என்று சொன்னவர்; சூதும் விஞ்சையும் வடசொற்கள் அல்ல! விளக்கம் வந்... என்ற தலைப்பின்கீழ் இருக்கிறது.

இவ்வாறு அது வடசொல், இது வடசொல் என்கிறவர்கள் ஏன் அவ்வாறு உளறுகின்றார்கள்? அவர்கட்கு வடசொல்லும் தெரியாது தமிழும் தெரியாது. ஒன்றுமட்டும் தெரியும். தமிழைத் தாழ்த்துவதன் வாயிலாகத் தமிழரைத் தாழ்த்தித் தமிழரின் உரிமையைத் தாழ்த்தித் தமிழர் பொருளை கொள்ளையடிப்பது என்பது!

இங்கு (சிங்கப்பூரில்) ஆரியர் ஒருவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "இந்தியன் மூவி நியூஸ்" என்னும் திரைப்பட திங்களிதழில் அவ்வாசிரியர் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் வடசொற்களாகவே பெய்து வைக்கிறார்.

இரா. கணபதி,
14, கம்போங்லாமா தெரு, சிங்கப்பூர்

உப்பொடு நெய், பால், தயிர், காயம் பெய்து அடினும் கைப்பறா பேய்ச் சுரையின் காய். தமிழரைப் பற்றியுள்ள இந்த நோயைத் தீர்க்கும் மருந்து பெரியாரிடந்தான் இருக்கிறது. உங்கள் ஒத்துழைப்பே இதற்கு விலை.

* * * *

கேள்வி : சூக, த்யூத என்பதின் திரிபென்றும், விஞ்சை, விந்த்யா என்பதன் திரிபென்றும் வையாபுரியார் சொல்லியுள்ளார். எப்படி?

கி. அறிவழகன், மூக்கன், வேலூர்.

பதில் : வையாபுரியார், தமிழே ஆரியத்தினின்று பிறந்தது என்று சொன்னவர்; சூதும் விஞ்சையும் வடசொற்கள் அல்ல! விளக்கம் வந்... என்ற தலைப்பின்கீழ் இருக்கிறது.

இவ்வாறு அது வடசொல், இது வடசொல் என்கிறவர்கள் ஏன் அவ்வாறு உளறுகின்றார்கள்? அவர்கட்கு வடசொல்லும் தெரியாது. தமிழும் தெரியாது. ஒன்றுமட்டும் தெரியும். தமிழைத் தாழ்த்துவதன் வாயிலாகத் தமிழரைத் தாழ்த்தித் தமிழரின் உரிமையைத் தாழ்த்தித் தமிழர் பொருளை கொள்ளையடிப்பது என்பது!

கேட்டல்: கோட்சே பார்ப்பான் காந்தியைக் கொன்றது கேட்ட பார்ப்பனர் உள்ளம் நாண வில்லையே.

கிளத்தல் : கோட்சே, காந்தியைக் கொன்ற தையும் அவர்களின் கட்சிக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்த நிகழ்ச்சிக்குப் பின்புதான் தென்னாட்டுச் சோதாப் பார்ப்பான் புல்லெடுக்கும் கை வில்லெடுக்கவும் கூடும் என்று சொன்னான்.

கேட்டல் : அடுத்த சென்னைச் சட்ட மன்றத் தேர்தலில் பார்ப்பனர் வாக்கெல்லாம் கண்ணீர்த் துளிக்குத்தானோ?

கிளத்தல் : கண்ணீர்த் துளிகளைப் புதைப் பதற்குத்தான் பார்ப்பானின் சுதந்தராக் கட்சி.

கேட்டல் : சென்ற தேர்தலில் கண்ணீர்த் துளியை எதைக் கொண்டு ஆதரித்தார்கள்?

கிளத்தல் : அதன் தகப்பன் வழியைக் கொண்டு.

கேட்டல் : ஆதித்தன் எவ்வளவு தூரம் பெரியாருக்கு ஒத்திருப்பார்?

கிளத்தல் : நின்ற வரைக்கும் நெடுஞ்சுவர்.

கேட்டல் : வான் இடத்தின் இரண்டாந் தலைவனான திங்களை மண்ணிடத்தில் உரிசிய எறிகுண்டுப் பாம்பு தொட்டது என்றால் திங்களின் மானந்தானே கப்பலேறிற்று?

கிளத்தல் : மண்ணின் பெருஞ்செல்வந்தான் கரியாயிற்று.

கேட்டல் : திடீரென்று உருசிய எறிகுண்டு திங்களைத் தீண்டிய செய்தி கேட்கப்படுகின்றதே?

கிளத்தல் : இல்லை, இல்லை, இல்லை. குருசேவு அமெரிக்கா போவதைத் தம் நாட்டு அரசியல் நிபுணருக்குச் சொல்ல, அரசியல் நிபுணர் தம் நாட்டு விஞ்ஞான நிலையத்தார்க்குச் சொல்ல நிலையத்தார் ஏடு எழுது நிபுணர்க்குச் சொல்ல, ஏடெழுது நிபுணர் அயல்நாட்டு விளம்பர நிலையங்கட்கு அறிவிக்க, அயல் நாட்டு விளம்பர நிலையத்தார் உலகத்தார்க்குச் சொல்ல, அதன்பிறகு தானே குருசேவு அமெரிக்காவுக்குப் புறப்பட்டார்.

கேட்டல் : இராசகோபாலாச்சாரி சுதந்தரா வுக்கு நிறையப் பணங்கொடுக்கக் காரணம் என்ன?

கிளத்தல் : கூட்டுப் பண்ணை முறையை ஆச்சாரி எதிர்த்து ஒழிக்கக் கூடும் என்று பணக்காரர் நம்புவதால்.

கேட்டல் : அறுவை முறையில் கருத்தடை செய்வதை அரசினர் ஆதரிக்கிறார்கள் என்று தமிழன் சொல்லுகிறான். அதையே வயிற்றை அறுத்துக் கருவை அழிக்கிறார்கள் என்று பார்ப்பானின் கூலி சொல்லுகிறான். இவற்றில் எந்தப் பேச்சு இனிதாய் இருக்கிறது?

கிளத்தல் : எப்போதும் தினத்தந்திப் பேச்சுத் தினத்தந்திப் பேச்சுத்தான்.

குயில் 22–9–59

* * * *

கேட்டல் : கோயிலில் தமிழ் வழிபாடு சரியில்லை என்று பக்தவத்சலம் கூறினார்! இவர் சொல்வது சரியா?

கிளத்தல் : (வட நாட்டினின்று) ஆட்டி வைத்தால் (தமிழகத்தில்) ஆரொருவர் ஆடாதாரே!

கேட்டல் : அஞ்சல் தலை, பணவிடைகளில் தமிழ் வரும்படி செய்த சுப்பராயனுக்குத் தமிழகத்தில் பாராட்டுக் கூட்டங்கள் நடத்த வேண்டாமா?

கிளத்தல் : அதற்குள்ளேயா? இடையில் தடையேற்பட்டுவிட்டால்? வடநாட்டான் நல்லவனாய் விட்டானா? உப்பொடு நெய் பால் தயிர் காயம் பெய்து அடினும் கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

கேட்டல் : சுதந்தரத் தமிழ்நாடு ஏற்பட்டால் வெளி நாட்டான் வந்துவிடுவான் என்று சுப்பராயன் சொல்வது சரியா?

கிளத்தல் : அடிமைத் தமிழ் நாட்டில் இப்போது வந்திருப்பவன் அயலானில்லை என்பது சுப்பராயன் எண்ணம்.

கேட்டல் : நாமெல்லாம் இந்தியர் என்று எண்ணி வாழ வேண்டும் என்கிறார் சுப்பராயன் —சரியா?

கிளத்தல் : அது முடிந்தாலும் இந்தியர் தாய்மொழியெல்லாம் இந்தி என்று எண்ணி வாழ முடியாது.

கேட்டல் : திருமண வீட்டில் இரண்டு நாட்கள் இசைத் தட்டுகள் காதைத் துளைக்கும் என்று காமராசர் கூறுகிறார். சரியா?

கிளத்தல் : காதிருந்தால்தானே அது துளைக்கப்படும்! தமிழரின் காதுகள் ஒழிந்து போய்ப் பல்லாண்டுகள் ஆயின. இருந்திருந்தால், கோயிலிலும், திருமணத்திலும் திருவிழாக்களிலும் வடமொழி உளறலை ஏன் என்று கேட்டிருப்பார்களே! அதோ பார் ஆகாஷ்வாணி!

கேட்டல் : மலையாளியுடன் நாம் சேர்ந்து வாழ முடியுமானால் வடநாட்டானோடும் வாழ முடியும் என்கின்றார் மாபொ.சி. சரியா?

கிளத்தல் : பாரதம் மலையாள நாட்டிலும் உண்டு; வட நாட்டிலும் உண்டு. ஆதலினால் இரண்டும் ஒன்றுதானே என்கிறார் மா.பொ.சி. ஆனால் ஒருத்தியை ஐந்து ஆட்கள் மணப்பதென்பது மலையாளத்தில் இல்லை. வடநாட்டில் இன்றும் நூற்சான்றாக நடைபெறுகின்றது. இது மா.பொ.சி.க்கு மறதி.

கேட்டல் : இராசாசியின் சுதந்தரக் கட்சி ஆற்றல் வாய்ந்ததுதானா?

கிளத்தல் : அட்டி என்ன? கண்ணீர்த்துளிகட்கு ஆதரவு மறுத்ததன் மூலம் அதையும் கெடுத்தது. சீர்த்திருத்த காங்கிரசுக்கு ஆதரவு கொடுத்ததன் மூலம் அதையும் கெடுத்தது. அடுத்த தேர்தலில் பார்.

குரல் : **2** குயில் : **29–9–59** இசை : **12**

* * * *

கேட்டல் : ஊர்க்காவல் அமைச்சரும், முதலமைச்சரும் நிதியமைச்சரும் தமிழகத்தைத் தனி உணவு மண்டலமாக்க தில்லிக்குப் போகின்றோம் என்று போனதில் என்ன ஆயிற்று?

கிளத்தல் : மானக்கேடு ஆயிற்று. பிரிக்க முடியாது என்று நிட்டவட்டமாகக் கூறிவிட்டான் வடக்கன்.

கேட்டல் : ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டி சிறிது உணர்ச்சி உடையவராகக் காணப்படவில்லையா?

கிளத்தல் : தென் உணவு மண்டலத்தைக் கலைத்துவிட வேண்டும். ஆந்திரா, மைசூர், கேரளா, தமிழகம் ஆகியவை தனித்தனி மண்டல மாக்கப்பட வேண்டும்.

வடக்கே ஒரிசாவும், மத்தியப் பிரதேசமும் தனித்தனி மண்டலமாகப் பிரிக்கப்பட்டிருக்கையில் இங்கு மட்டும் ஏன் இந்த இழவு?

என்றெல்லாம் கூறி வடக்கன் அநீதியை வன்மையாகக் கண்டிக்கின்றார் சஞ்சீவி. இப்படி. யெல்லாம் போக்கிரித் தனமாக பேசமாட்டார்கள் நம் தமிழமைச்சர்கள்.

கேட்டல் : இப்படி தமிழக நன்மைக்கு வடக்கர் ஒத்து வராததால் தமிழக அமைச்சர்கள் தம் பதவியினின்று விலகல் அஞ்சலை நேருவிடம் கொடுத்துவிடப் போகின்றார்களாமே! எப்போது?

கிளத்தல் : வருகிற திங்கட்கிழமை இராகு காலம் கழித்து!

கேட்டல் : முறிந்த எலும்புகளை 48 மணி நேரத்தில் ஒட்டவைக்கும் பிளாஸ்டிக் பசை ஒன்றை அமெரிக்கா கண்டு பிடித்திருக்கிறது. இங்கு அப்படி ஏதாவது உண்டா?

கிளத்தல் : ஒரு மணி நேரத்தில் ஆயிரம் பேருக்கு நாமம் போடத்தக்க ரப்பர் ஸ்டாம்பு போன்ற ஒரு பொறியைத் திருவரங்கம் பார்ப்பனர் கள் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

கேட்டல் : காங்கிரசு கட்சித் தேர்தலில் ஊழல்கள், லஞ்சம், பித்தலாட்டங்கள் தாண்டவ மாடின. ஆதலால் நான் காங்கிரசிலிருந்து விலகிக் கொள்கிறேன். என்று பிரகபூர் மாவட்டச் ச

மன்றின் உபதலைவர் இந்திராகாந்திக்கு எழுதினார். இந்தச் செய்தியை காங்கிரசுக்கு வால் பிடிக்கும் செய்தித் தாள்களும் வெளியிடக் காரணமென்ன?

கிளத்தல் : மற்ற மாவட்டங்களில் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்று மறைக்க.

கேட்டல் : மேற்கு வங்க எல்லையில் காவல் காக்கப் படை ஒன்று திரட்டப் போவதாக முதலமைச்சர் டாக்டர். பி. சி. ராய் இராச்சிய சபையில் தெரிவித்தார். இது உங்களுக்குத் தெரியுமா?

கிளத்தல் : அதுமட்டுமல்ல, நாட்டை எதிரிக்குக் காட்டிக் கொடுக்காத இனம் இந்தியாவில் பார்ப்பன இனந்தான் என்றுகூட முடிவு செய்துள்ளதாக நமக்கு மற்றொரு செய்தி எட்டியிருக்கிறது.

குரல்—2 குயில் 6-10-59 இசை:13

* * * *

கேட்டல் : அமெரிக்கா முழு ஆயுதக் குறைப்புக்கும் உடன்படுகிறதா?

கிளத்தல் : ஆமாம்; வாயால்!

கேட்டல் : கல்கத்தா அருகில் ஓர் வெள்ளியை மற்றக் கட்டிகளிலிருந்து பிரித்தெடுக்கும்தொழிலை நாலேகால் கோடிச் செலவில் ஏற்படுத்தினார்களாம். அது வேலை செய்யாமலே அப்படியே இருக்கிறதாமே. எப்போது வேலை செய்யத் தொடங்கும்?

கிளத்தல் : வேலை செய்வதற்கா தொழிற்சாலை ஏற்படுத்தினார்கள்? இல்லவேயில்லை. தெரிந்தவர்கள் கொள்ளையடிக்கத்தானே!

கேட்டல் : ஏழைகளுக்கு நன்மை செய்து கொண்டிருக்கும் காங்கிரசுக்கு முட்டுக் கட்டை போடுகின்றார் இராசாசி என்று காமராசர் ஏன் சொல்னார்?

கிளத்தல் : பயனற்ற பேச்சுத்தான! காங்கிரசை ஒழிப்பதும் ஏழைகளுக்கு ஒரு நன்மையும் ஏற்படாமல் தடுப்பதும்தானே இராசாசி கனவு!

கேட்டல் : உதைத்துத் துரத்துவோம்! இப்படி இந்தியாவின் எல்லைப் பகுதியை விழுங்கி வரும் சீனாவுக்கு எச்சரிக்கை விடுத்தாராமே நேரு?

கிளத்தல் : அரசியல் நரித்தனம். இதென்ன இப்படிச் சொன்னீரே. நேருவே என்று சீனா ஒரு அதட்டு அதட்டினால் நேரு சொல்லக் கூடியதும் இதுதான். ஒன்றுமில்லை. இதெல்லாம் அரசியல் நரித்தனம்.

கேட்டல் : தில்லியை விட்டுப் பிரிந்தால் தமிழகச் செலவுக்குப் பணம் கொடுப்பவர் யார்? என்று அமைச்சர் இராமையா கேட்கிறாரே?

கிளத்தல் : பணத்துக்காக தமிழகம் அடிமையாய் இருக்கட்டுமே என்பது அமைச்சர் கருத்து.

கேட்டல் : வறுமை ஒழியவேண்டுமானால் கதர் கட்ட வேண்டும் என்று ஏன் அமைச்சர் மாணிக்கவேலர் சொல்லுகிறார்?

கிளத்தல் : யாரும் கதர் கட்டவில்லை என்று வைத்துக் கொள்வோம். எத்தனை பார்ப்பனர் வீட்டில், அடுப்பில் பூனை தூங்கும் தெரியுமா?

கேட்டல் : காதற் களமாகிவிட்டது கோயில் என்று குன்றக்குடியாரே சொல்லுகிறாரே?

இளைத்தல் : திராவிடர் கழகத்தார் எதிரில் அப்படி! கோயிற்காரர் எதிரில்—வேறு வகையாக!

குரல்—2 குயில் 13–10–59 இசை: 14

* * * *

கேட்டல்: சிவாஜிகணேசனுக்குத் திருச்சி நகரசபை வரவேற்பளித்தது பற்றி உங்கள் எண்ணம் என்ன?

இளைத்தல் : இலக்கம் இலக்கமாகக் கல்வி முதலியவற்றுக்கு வாரிக் கொடுத்த—கொடுத்து வரும் கணேசனுக்கு வரவேற்பளிக்காவிடில் திருச்சி நகரசபை இருந்தென்ன, தொலைந்தென்ன?

கேட்டல் : சேலம் மாவட்டத்தில் தீர்த்த மலைப் பாங்கில் அகப்படக்கூடிய இரும்புக் கட்டியின் அளவு 475 கோடி என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். தென்னாட்டின் வருங்கால நிலை எப்படி?

இளைத்தல் : தமிழகத்தில் அடிமை நிலைமை தீரும் வரைக்கும் இதற்கெல்லாம் மகிழ்ச்சியடைந்துவிடுகிறவன் முட்டாள்.

கேட்டல் : இந்தியா எங்கும் உள்ள திரைப்படக் காட்சி விடுதிகள் 4000! ஆனால் தமிழகத்தில் மட்டும் 2000 உள்ளன. நிலைமை மகிழ்ச்சிக்குரியதுதானே?

இளைத்தல் : அழுகைக்குரியது. அடிமையுணர்ச்சியில்லாத தமிழ்ப் புலவரின் உள்ளத்தினின்று திரைப்படங்கள் உண்டாக வேண்டும். அப்போது காட்சி விடுதிகள் கணக்கின்றிப் பெருக வேண்டும்.

கேட்டல் : பேரறிஞர்கள் ஏ. இராமசாமி, ஏ. இலட்சுமணசாமி ஆகியவர்க்கு இன்று 72-ஆம்

ஆண்டு பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. இந்தக் கொண்டாட்ட நேரம், அவர்கள் நாட்டுக்குச் செய்துள்ள அருஞ்செயல்கள் நினைவுக்கு வரவில்லை.

கிளத்தல் : நாட்டுக்காக? எந்த நாட்டுக்கு? இந்தியாவுக்கு! தமிழகத்துக்கு அல்ல! அவர்களின் விழா நேரம் அவர்கள் பேராற்றல் தமிழுக்கும், தமிழரின் மானத்திற்கும் முழுதும் பயன்படவில்லையே—என்ற நினைவுதான் மேலெழுகின்றது.

கேட்டல் : குன்றக்குடி அடிகளார் அஞ்சல் தலையில், வள்ளுவரைப் பொறிப்பதைவிட வள்ளுவர் உள்ளத்தைப் பொறிக்கலாம் என்கிறாரே!

கிளத்தல் : பார்ப்பான் சொல்லிக் கொடுத்திருப்பான், உருவம் பொறிப்பைதயும் கெடுக்க.

கேட்டல் : குச்சுக்காரி விடுதிகள் மிகுதியாவதால் ஊர்க்காவற்காரர்களையும் மிகுதியாக்க வேண்டுமா?

கிளத்தல் : அதெப்படி முடியும். ஒழுக்கக் கேடுகள் விரைவாக வளர்ச்சியடைந்து வருவது யாரும் அறிந்தது. வளர்ச்சிக்குரிய வேரைக் கிள்ள வேண்டும். அதற்கு மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். செல்வநிலைநிறைவு பெற வேண்டும். சாதி ஒழிய வேண்டும். தமிழர் ஒன்றுபட வேண்டும். நாடு விடுதலை பெற வேண்டும்.

கேட்டல் : ஆச்சாரி கேட்பது சுதந்திரமல்ல. அவர் இந்த நாட்டுக்குக் கேட்பது காட்டுமிராண்டித்தனம்.

கிளத்தல் : என்று கோயிலில் தமிழ் வேண்டாம் என்ற பக்தவத்சலம் பகர்கின்றாரா?

குரல் : 2 குயில் 20–10–59 இசை: 15

* * * *

செ. மு. இளங்கோ, சென்னை.

கேட்டல் : கவி, கவிஞர் என்னும் சொற்கள் வடசொற்கள் என்று நீலாம்பிகை அம்மையாரின் வடசொற்றமிழ் அகர வரிசை என்னும் நூலில் காணப்படுகிறதே.

கிளத்தல் : கவிதல் என்பதன் அடியாகிய கவி என்பதையே கொண்டு தோன்றிய கவி, கவிஞர் என்ற சொற்கள் தூய தமிழ்க் காரணப் என்று நான் சொல்வதை நீலாம்பிகையம்மையார் அல்ல, எவராலுமே மறக்க முடியாது. தமிழ் இலக்கணம் ஒப்புவதால்!

வல்லுநர் ஒன்று பற்றி ஒரு முடிவு கூறுவதற்கு அவர்களுக்குள்ள ஆராய்ச்சித் திறன் மட்டும் போதியதன்று. காலமும் தேவை. நீலாம்பிகையார் ஆராய்ந்த காலம் ஒன்று. அதே காலம் கல்லுப் பிள்ளையார்போல உட்கார்ந்து கொண்டிருக்கவில்லை.

கேட்டல் : முயற்சி செய்தல் என்பது வடவர் முறையா? முயலுதல் என்பது தமிழர் முறையா?

கிளத்தல் : அப்படி ஒன்றுமில்லை. தமிழ்ச் சொற்களின் உண்மைப் பொருளை நோக்குதல் வேண்டும். செய்தல் என்பது செம்மையுற முடித்தல் என்ற பொருளில் அமைந்தது. செம்மையின் மை கெட்டு, முன்னின்ற மெய்யாகிய 'ம்'

திரிந்து செய் என நின்றது. அதன் அடிப்படை யாகத் தோன்றியதின் தொழிற் பெயரே செய்தல் எனபதை உணரும்போது முயற்சி செய்தல் என்ற சொற்றொடர்க்கு முயற்சியைச் செம்மை யுற முடித்தல் என்னும் பொருள் சிறத்தல் காணப் படும். முயற்சி யுடையார் என்பது வடவர் நெறி என்று சொல்லுதல் கூடாது. முயற்சியை எப்போ தும் உடையவர் என்பது அத்தொடரின் பொருள்.

கேட்டல் : 'உதயசூரியன்' தமிழ்ச் சொல்லா?

கிளத்தல் : உதயசூரியன் கலப்பில்லாத வட சொற்றொடர்.

குரல்—2 குயில் 27-10-59 இசை:16

* * * *

கேட்டல் : திரு. பி. டி. இராசன் அவர்கள் சுதந்திராக் கட்சியை ஆதரிக்கிறார். அப்படியா னால் கண்ணீர்த்துளி கட்சியைக் கைவிட்டு விட்டாரா ?

கிளத்தல்: கைவிட்டு விடவில்லை. கண்ணீர்த் துளி கட்சியை கையிற்பிடித்துக் கொண்டுதான் சுதந்திராவை ஆதரிக்கிறார்.

கேட்டல் : சீன, இந்திய முரண்பாடு பற்றி முதல்வர் நேரு பேசி வருவதில் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்ன?

கிளத்தல் : எல்லை முரண்பாட்டைச் சரி கட்ட நாட்டு மக்கள் ஒத்துழைக்க வேண்டும். என்று கூறியது சரியான பேச்சு. அவரும் நாட்டு மக்களின் ஒத்துழைப்பைப் பெற விரைவில் செய்ய வேண் டியது சாதி அடிப்படையில் அமைந்துள்ள சட் டத்தை மாற்றி அனைவரும் சமம் என்ற நிலையை உண்டாக்கி விடுவதாகும்.

கேட்டல் : சீன நெருக்கடியைச் சரிகட்ட இந்தியா சீனாவின் எதிர்ப்பு நாடுகளின் துணையை கோர வேண்டியதிருக்க, நடுவு நிலைமைக் கொள்கையினின்று தவறவே மாட்டோம் என்று நேரு சொல்வது சரியா?

கிளத்தல் : நேரு சொல்வதன் பொருள், துணை செய்ய விரும்பும் நாடுகள் தாமாகவே துணை செய்யட்டும் என்பது தான். துணை செய்த தற்கு விலை கேட்க மாட்டார்கள் அல்லவா?

கேட்டல் : இலக்கியம் தமிழ்ச் சொல்லா?

கிளத்தல் : ஆம். விளக்கம் : 'வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?' என்ற தலைப் பில் வந்துள்ளது.

கேட்டல் : லை. இப்படி எழுதுவது தவறு என்கின்றார் அல்லவா?

கிளத்தல் : தவறு என்பது தவறு. 'லே'. என்று எழுதுவது இடையில்...என்பதுதான் சரி'

கேட்டல் : தமிழர், தெலுங்கர், மலையாளி கள், கருநடர் ஆகியோரின் கூட்டுத் தொகை என்ன?

கிளத்தல் : பதினைந்து கோடி.

கேட்டல் : சகரம் தமிழில் மொழிக்கு முதலில் வராதா?

கிளத்தல் : தொல்காப்பியத்தில் வராது. நன் னூலில் வரும்.

கேட்டல் : தொல்காப்பியர் காலம் எது?

கிளத்தல் : தொல்காப்பியர் காலம் 5,600 ஆண்டுகட்கு முன் என்று பேராசிரியர் மறைமலை யடிகளார் அருளிச் செய்தார்.

கேட்டல் : தமிழின் எழுத்துக்களைச் சுருக்கி பயன்படுத்தினால் தமிழின் வளர்ச்சிக்கு ஊறு பயக்குமா?

கிளத்தல் : ஊறு உண்டாகாது.

கேட்டல் : வடமொழி எழுத்துக்களாகிய ஜ, ஷ, ஹ, க்ஷ, ஸ ஆகிய எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களோடு கூட்டிக் கொள்ளலாமா?

கிளத்தல் : இந்த ஒலிகள் தமிழில் இருக்கையில் வடமொழி எழுத்துக்கள்வேண்டியதேஇல்லை. ஃ என்ற ஆயுதத்தைத் தமிழ் எழுத்தில் முறைப்படி சேர்த்தால் வடவரின் ஜ முதலிய ஒலி உண்டாகும். மாணிக்க நாய்க்கர் இதுபற்றி வெளியிட்ட நூலிற் பரக்கக் காண்க. அன்றி F என்ற ஒலியும் தமிழில் இல்லை. அதையும் ஆயுதத்தால் உண்டாக்கலாம். விடுதலையில் ஃப் என்று குறிப்பதன் வாயிலாக F என்ற ஒலியை காட்டுவது காண்க. க்ஷ என்பதற்கு ட்ச போதும்; ஹ என்பதற்கு அ போதும், ஸ என்பதற்கு ச போதும்.

இதுபற்றி புலவர் குழுவில் பேச்சுவந்தபோது தேவ நேயப்பாவாணர் ஜ, ஷ முதலிய ஒலிகளே வேண்டியதில்லை என்று கூறியது, மாணிக்க நாய்க்கர் முறையையே எதிர்த்ததாகும். பெர்னாட்ஷா என்பதற்கு பெர்னட்சா என்றே போடலாம் என்பது பாவாணர் கருத்து போலும்.

ஏரல்: 2 குயில் 10-11-59 இசை : 18

* * * *

கேட்டல் : விலாசம் வடசொல்லாதலால் அதற்குத் தமிழ்ச்சொல் எது?

கிளத்தல் : முகவரி! பழநியாண்டி விலாசம் என்பதை விட பழநியாண்டி இல்லம், பழநியாண்டி நிலையம், (வணிகத்துறையானால்) பழநியாண்டி மண்டி என்பனவற்றில் ஏற்றதொன்றை வைத்துக் கொள்க.

கேட்டல் : வாணிகத்தில் நாணயம் எப்போது?

கிளத்தல் : தனியாரிடத்தினின்று வாணிகம் முற்றும் பறிக்கப்பட்டு அரசினரால் நடத்தப்படும் போது.

கேட்டல் : இந்திய எல்லையில் கால் வைத்துள்ள சீனாவைத் துரத்த என்ன செய்ய வேண்டும்?

கிளத்தல் : நேரு படை சேர்க்கிறார். இது வருந்தத்தக்கது. ஆனால் முதலில் செய்யத் தக்கது மற்றொன்றுண்டு. இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டு கட்சியை உடனே கலைத்து விடவேண்டும். கம்யூனிஸ்டு தலைவர்களைச் சிறையில் தள்ள வேண்டும்.

கேட்டல் : உணவுப் பொருள் விலையைக் குறைக்க அரசினர் உடனடியாகத்தலையிடவேண்டுமென்று அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து செய்யும் கிளர்ச்சிபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

கிளத்தல் : தனியாரிடத்தில் விட்டு வைத்துள்ள வாணிகம் மீட்கப்படவேண்டும். அதற்கான முயற்சி, அனைத்துக் கட்சியின் கிளர்ச்சியன்று; நேரடி நடவடிக்கை! நெல் விற்பவன், ஏறிய விலைக்கு மலையாளத்தானுக்கு விற்கின்றான். அந்த வண்டியைத் தமிழன் ஓட்டிக்கொண்டு போகின்றான். வண்டி மறிக்கப்படவேண்டும். ஓட்டுபவனை அனைத்துக் கட்சியினரும், சாலை மரத்

தில் கட்டிப்போட வேண்டும். விலை ஏறட்டும் என்று சரக்கைப் பதுக்கி வைப்பவன் கடை அனைத்து கட்சியின் ஆராய்ச்சிக்கு உட்படவேண்டும். கொண்டபடி போலும் விலை பேசி லாபஞ் சிறிது கூடிவர நயமுரைப்பார் (குமரேசசதகம்) என்பதற்கு மாறாக வாணிகர் நடந்து கொள்ளும் போது, அதாவது மிகப் பெருவிலை பெற்றுப் பொருளை விற்கும்போது அனைத்துக்கட்சி நேரே அந்த வணிகனுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும். அனைத்துக்கட்சி இப்போது நடத்தி வரும் பொதுக்கூட்டத்நால் பொதுமக்களுக்குத் தீமை ஏற்படுகிறதென்றே சொல்ல வேண்டும். இயற்கை முறையில் வேண்டிய நேரடி நடவடிக்கையைப் பொதுக் கூட்டம் எழாமற் செய்கின்றதல்லவா?

கேட்டல் : நல்லிசைப் புலமைவல்ல மெல்லியலார் தமிழகத்தில் எத்தனை பேர்கள் இருந்தார்கள்?

கிளத்தல் : முப்பத்தொரு பெண்பாற் புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் வருமாறு: 1. ஆதிமந்தியார், 2. வெள்ளிவீதியார், 3. உப்பை உறுவை, 4. ஒக்கூர் மாசாத்தியார், 5. ஔவையார், 6. காவிற்பெண்டு, 7. காக்கைபாடினியார், 8. காரைக்கால் அம்மையார், 9. காமக்கணிப் பசலையார், 10. கிழார் கீரன் எயிற்றியார் 11. குறமகள் இளவெயினி, 12. குறமகள் குறி எயினி, 13. குன்றியாள், 14. நப்பசலையார், 15. தமிழறியும் பெருமாள், 16. நல்வெள்ளி, 17. நெடும்பல்லியத்தை, 18. பாரி மகளிர், 19. பூதப்பாண்டியன் தேவியார், 20. பூங்கண்ணுத்திரையார், 21. பேய். மகள் இளவெயினி, 22. பொன்மணியார், 23. போந்தைப் பசலியார், 24. மதுஷலைக் கடையத்தார், 28. மாறோகத்து நம்பசலையார், 26

மாற்பித்தியார், 27. முன்னியூர் பூதியார், 28 வருமுளையாரித்தர், 29. வரதுங்கராமன் தேவியார், 30. வில்லிபுத்தூர்க் கோதையார், 31. வெண்மணிப் பூதியார்.

கேட்டல்: ஒருவர் வெளியிற் செல்லப் போகும்போது அவரை 'எங்கே போகின்றீர்' என்று கேட்டால் குற்றமா?

கிளத்தல் : எங்கே போகின்றீர் என்று கேட்டால் குற்றமன்று; கேளாவிட்டால் குற்றமாகும்.

கேட்டல் : நான் என் மகளுக்கு சாந்தி என்று பெயர் வைத்தேன். அது வடசொல் என்று தோழர் சிலர் எதிர்க்கின்றார்கள். அது வடமொழியா? வேறென்ன வைக்கலாம்?

கிளத்தல் : சாந்தி என்பது வடசொல். அதே பொருளுடைய தூய பண்டைய தமிழ்ப்பெயர் வேண்டுமானால் 'அமைதி' என்பதை வைத்துக் கொள்ளுங்கள்.

குரல் : 2 குயில் 24-11-59 இசை : 20

* * * *

கேட்டல் : அசுவமேத வேள்வியில் குதிரையைக் கொல்வதாகச் சொல்லுவது பொய் என்று சொல்லப்படுகிறது. அது பொய்யா?

அழகன், கோவை.

கிளத்தல் : ஆரியர் நாகரிகத்தை அறிவுடையோர் கான்றுமிழத் தொடங்கவே ஆரியநூற் கருத்துக்களை திருத்தத் தொடங்கினார்கள்.

அசுவமேத வேள்வியில் குதிரையை வெட்டுவது மட்டுமா? வெக்கக்கேடு! பாரிக்ஷதன் என்னும் அரசன் மனைவியாகிய வபுஷ்டமை மேல் ஆசை

வைத்த இந்திரன் எண்ணம் முடியாமற் போகின்றது. அதன்பின் பாரிஷதன் அசுவமேத வேள்வி செய்ய ஒரு குதிரையை வெட்டுகின்றான். உடனே செத்த அக்குதிரையின் உடலுள் இந்திரன் புகுந்து கொள்ளுகின்றான். வேள்வி முறைப்படி வேள்விக்குரியவனான பாரிஷதன், மனைவியாகிய வபுஷ்டமையின் பெண்குறியில் செத்த குதிரையின் குறியைப் பொருத்தும் வேளையில் இந்திரன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளுகின்றான். இது சிவமகா புராணத்தில் இருக்கிறது.

இதனால் ஆரியப் பார்ப்பனரின் காட்டுமிராண்டித்தனமும், விருப்பப்படி தம்நூற்கருத்தை அவ்வப்போது மாற்றிக் கொள்ளும் தனமையும் தீய ஒழுக்கமும் விளக்கமாகின்றன.

கேட்டல் : தமிழுக்குப் புகழ் தரும் செயல் எது?

மா. கிருஷ்ணன், திருப்பாதிரிப்புலியூர்

கிளத்தல் : வடவரை அடக்குவதுதான்.

''வடவர் உட்கும் வான்தோய் நல்லிசை'' என்று இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பதிற்றுப் பத்துப் புகழ்வது காண்க!

கேட்டல் : வானொலியை ஆகாஷ்வாணி என்பது பொருந்துமா?

செந்தமிழ்ச்செல்வி, புதுவை.

கிளத்தல் : ஆகாஷ்வாணி என்பது வடசொற்றொடர். ஆகாஷ்வாணி என்று இந்தியில் வந்தது. ஆகாஷ்வாணி என்பதும் ஆகாசவாணி என்பதும் ''அசரீரியாகிய தரும தேவதையைக் குறிக்கும் என்று அவர்கள் ஆதரிக்கும் வடநூலில்

இருக்கிறது. அப்படியிருக்கையில் வானொலியை ஆகாஷ்வாணி என்றோ ஆகாசவாணி என்றோ சொல்லுகின்றவர், ஆராய்ச்சியற்றவர்கள் என்றே சொல்லவேண்டும்.

கேட்டல் : பெரியாருக்குப் பின் திராவிடக் கழகம் செயலற்றுப் போகும் என்று குத்தூசி குருசாமி எண்ணுகின்றார். உங்கள் கருத்தென்ன?

சித்தாநந்தம், முத்தால்பேட்டை.

கிளத்தல் : ஆட்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல. தி.க. அது கருத்தைப் பொறுத்தது. அக்கருத்துக்கள் இயற்கையோடியைந்தவை. தி.க. அழிவதென்பது இந்த ஊழியில் இல்லை.

கேட்டல் : தமிழ்ப் புலவர்கள் அனைவரும் தி.க. கொள்கைகளை எதிர்க்கின்றார்களா?

பாண்டியன், மேல்பட்டாம்பாக்கம்.

கிளத்தல் : சிலர் தி.க.வின் மூங்கில் தூண்கள் பலர் இரும்புத்தூண்கள். முன்னதற்கு எடுத்துக் காட்டு தெ. பொ. மீ., பின்னதற்கு டாக்டர் இராசமாணிக்கனார்.

கேட்டல் : தமிழகம் பிரியவேண்டும்; அப்போதுதான் தமிழை மீட்கமுடியும் என்று சொல்லச்சொல்லத் தமிழுக்கு எதிர்ப்புதான் மிகுகிறது.

கணேசன், திருச்சி.

கிளத்தல் : இப்போது எதிர்ப்பு மிகுந்து வருவதாக எண்ணுவது பிழை எண்ணெய் இல்லாத தால் படர்ந்தெரிகின்றது.

கேட்டல் : சுதந்திரக் கட்சியும், கம்யூனிஸ்டு கட்சியும் கண்ணீர்த்துளிகளும் ஒன்று சேர்ந்தால் காமராசர் கை தாழ்ந்துவிடுமா?

தண்டபாணி, மதுரை

கிளத்தல் : தி.க. கைகள் என்ன பூப்பறித்துக் கொண்டா இருக்கும்? காமராசரைத் தோற்கடிப்பதற்கு உரிய அறிகுறியே காணப்படவில்லை.

குரல் 2 குயில் 1–12–1959 இசை 21

* * * *

கேட்டல் : மதி தமிழா?

இராச. சாரதி, குயவர்பாளையம்.

கிளத்தல் : திருமதி தி. நீலாம்பிகையம்மையார் இயற்றிய "வடசொற்றமிழ் அகரவரிசை" என்னும் நூலின் பிற்சேர்க்கையாக,

யாழ்ப்பாணம் உயர்திரு ஞானப்பிரகாசர் அவர்களும் வேறுசில அன்பர்களும் ஐயப்பாடு நிகழ்த்திய சொற்கள் குறித்து, சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகட்கும் எழுதிக் கேட்டதற்கு வந்த விடைக் குறிப்புக்கள் :

......என்று காணப்படுகிறது. அதனடியில் மதி—தமிழ் என்று காணப்படுகின்றது. எனவே மதி தமிழ் என்று மறைமலையடிகளார் திருவாய் மலர்ந்தருளினார். வடசொற்றமிழ் அகர வரிசை பக்கம் 280 பார்க்க. அந்த நூலை இயற்றினோர் பெயரைக் குறிக்குங்கால் திருமதி. தி. நீலாம்பிகை அம்மையார் என்றே குறிப்பதும் நோக்கத்தக்கது.

இனி, மதி என்பது தமிழ்ச்சொல் என்றால் அது என்ன பொருளில் அமைந்திருக்கிறது என்பது கேள்வி. மதி என்பதற்கு மதிப்பு என்பது பொருள்.

என்று மறைமலையடிகளே குறித்துள்ளார். திருமதி என்பதன் பொருள் திருவும் மதியும் உடையவள் என்பதாம். அவ்வாறெனில் திருமதி எனபதைத் திருவும் மதியும் உடையவன் என்றும் சொல்ல லாமோ? சொல்லலாகாது. ஏன் எனில் திருமதி என்பதில் பெண்பாற் பெயர் இறுதிநிலை புணர்ந்து கெட்டது என்பர். ஆதலின் திருமதி என்பது பெண் பால் அடைமொழியாகவே கொள்ளப்படும். திரு மதி என்பது உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை எனினும் அமையும்.

திருவும் மதியும் உடையாள் என்பது தவிர திருவால் ஆகிய மதியுடையவள் (மதிப்பு) என மூன்றனுருபும் பயனும் உடன்றொக்க தொகை எனினுமாம். எனவே திருமதி எனத் திருவை யடுத்துவரும் போதும் மதி தமிழ்ச்சொல்லேயாதல் பெற்றாம்.

கேட்டல் : நைஜீரிய மாணவர் இந்நாட்டில் புகைவண்டி பற்றி அனைத்து நுட்பங்களையும் கற்றுக்கொள்ள வந்திருக்கிறார்கள். அவர்கள் நிலை என்ன ஆகும்?

சு. இராமலிங்கம், பிள்ளைத்தோட்டம்

கிளத்தல் : இங்கு அவர்கள் முன்னின்று இழுக்கும் விசைப்பெட்டியில் எங்கே தலைவைத் துப் படுப்பது, எங்கே காலை நீட்டித் தூங்குவது என்பதைத் தெரிந்து கொள்வார்கள். விசையை எப்படி முடுக்கினால் பாதையை விட்டு விலகி வண்டி தலைகீழாகப் புரளும் என்பதில் தேர்ச்சி யடைவார்கள்.

ஓட்டைப் பாலம் இது என்று தெரிந்து கொண்டு வண்டிகள் ஆற்றில் பாய என்ன செய்ய

வேண்டும் என்பதை நன்றாய் அறிந்து கொள்வார்கள். இப்படி போக்குவரத்து மக்கள் பொழுதோடு கூண்டோடு சிவபெருமான் திருவடி நிழலை அடைய உலகமெல்லாம் சிரிக்கும் நுட்ப வேலைகளில் தேர்ச்சி பெற்று நைஜீரிய மாணவர்கள் நற்சான்றோடு தம் நாடு சென்று தம் கையிருப்பைப் காட்டுவார்கள். அதற்குப் பரிசாக அவர்களைக் புளிய மரத்தில் கட்டிவைத்து மிலாரினால் தோலை உரிப்பார்கள் நைஜீரிய மக்கள்.

கேட்டல் : மாடப்பள்ளிப் பஞ்சாயத்தில் 28–11–59ல் முதல்வர் காமராசருக்கு ஒரு வரவேற்பு அளிக்குமுன் சிரியையும் சிரிமதியையும் ஒழிப்பதான ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதுபற்றி முதல்வர் ஒன்றும் கூறவில்லையே, ஏன்?

ஆ. சுந்தரேசன், சிதம்பரம்.

கிளத்தல் : சிரியும், சிரிமதியும் ஒழியத்தான் வேண்டும் என்று காமராசர் சொன்னால் பக்தவத்சலனார், மடத்தம்பிரான்கள் படுகாலித் பாப்பர பசங்கள் இனத்தைச் சுரண்டும் தில்லிக்காரர் வருந்துவார்கள். சிரியும் சிரிமதியும் இருக்கத்தான் வேண்டுமென்றால் தி.க.வுக்கு எரிச்சல்தான் வரும்.

குரல் : 2 குயில் 8–12–59 இசை : 22

* * * *

கேட்டல் : ரோசா என்ற மலருக்குத் தமிழில் என்ன சொல்லுவது?

உசைன், திருமதிக்குன்றம்.

கிளத்தல் : வெளிநாட்டுப் பொருள் அது. அதைத்தமிழில்சொல்லவேண்டுமானால் உரோசா

என்க. தமிழ் மொழிக்கு முதலில் ரோ வராது ஆகையால்.

கேட்டல் : உதயம், சூரியன் தமிழ்ச்சொற் களா?

நா. அப்பு, பம்பாய்.

கிளத்தல் : வடசொற்கள்.

கேட்டல் : முகம் தமிழா?

ஆ. அருணன், புதுவை

கிளத்தல் : ஆம். வந்தவர் மொழியா.... பார்க்க.

கேட்டல் : போர் வீரர்களின் அதிகாரிகள் ஏறிச்சென்ற புகைவண்டியை தேசூர், அர்சிங்கா வில் கவிழ்க்க இந்தியப் பொது உடமைக்காரர்கள் முயன்றது ஏன்?

வீ. கு. ஜீவா, கடலூர்.

கிளத்தல் : அவர்கள் சீனாவுக்கு உதவி செய் பவர்கள் இந்தியருக்குப் பிறந்தாலும் சீனாவையே 'அப்பா, அப்பா' என்று அழைப்பவர்கள்.

கேட்டல் : புதுவை சட்டசபையில் சீன வெளவுதலை எதிர்த்துத் தீர்மானம் வந்தபோது புதுவை அரிவாள், சுத்தி உறுப்பினர் எதிர்த்தார் களாமே.

முல்லை, மணப்பள்ளி.

கிளத்தல் : ஆம். புதுவை அரசினர் சலுகை இதனால் அவர்களுக்குக் குறைந்துவிடுமா, என்ன?

கேட்டல் : இந்தியப் பொதுவுடமைக்காரர் சீனாவை வெளிப்படையாக ஆதரிக்கின்றார்களா?

மாறன், குடந்தை.

கிளத்தல் : மறைமுகமாக ஆதரிப்பதாக இந்தியப் பேரரசு புளுகுகின்றது.

கேட்டல் : தமிழ்ச்சொல் ஆராய்ச்சி, அகர வரிசையை உருவாக்க தெ.பொ.மீனாட்சிசுந்தரம், சேதுப்பிள்ளை, துரை அரங்கசாமி, அ.ச. ஞான சம்பந்தம் ஆகியவர்களைக் குழுவாக்கி இருக்கும் சென்னை அமைச்சரவை நோக்கமென்ன?

திலகம், அரியநகர்.

கிளத்: ஆச்சாரியின் சுதந்திரக் கட்சிக்கு வாழ்த்துக் கூறுவதுதான் நோக்கம்.

கேட்: அகர வரிசை குழுவின் வேலை எப்படி இருக்கும்?

குறள்பித்தன், சென்னை.

கிளத்: உலகிலுள்ள கடல்கள் அனைத்தும் சகரரால்—ஆரியரால் தோண்டப்பட்டது. அதனால் அதற்கு சகாரம் என்று பெயர் ஏற்பட்டது என்றிருப்பதை தமிழர்கள் எதிர்ப்பதுண்டு. அதை எதிர்க்காமல் இருக்கும்படி அக்காரணத்தை உறுதி செய்தருளும் தெ.பொ. மீ. குழு.

அகத்தியர் கமண்டலத்திலிருந்து கவேரன் மகளை இந்திரன் வேண்டுக்கோளுக்கிணங்கி பிள்ளையார் காக்கை உருக்கொண்டு உருட்டவே அந்தக் கவேரன் மகள் காவேரியானாள் எனப் புராணப் புளுகு ஒன்று உண்டு. தமிழர்கள் இதை ஏற்றுக் கொள்வதில்லை. ஒத்துக் கொள்ளும்படி தெ.பொ.மீ. குழு இப்படிப் பல போக்கிரித்தனங்களைச் செய்யலாம்.

கேட்: குயிலில் வரும் அனைத்தும் பெரும்பாலும் பாட்டுக்களாகவே இருப்பதாலும், அப்பாட்டுக்களும் எளிய நடையில் இல்லாததாலும்

படிப்பதில் தொல்லை ஏற்படுகின்றன. இந்நிலையைப் போக்க எண்ணம் உண்டா?

இராமசாமி, கதிர்காமம்.

கிளத் : பாட்டுப் படித்து பொருள் உணரும் ஆற்றல் மிகுதியாக்கவேண்டும். வடசொல் நீக்கித் தூயதமிழ்ச்சொற்களைக் கொண்டே செய்யுள் செய்து தமிழ் நடையைப் பெருக்க வேண்டும் என்பது குயிலின் கொள்கை. படிப்பதில் தொல்லை காண்பவர் மீண்டும் படித்தால் புரிந்து கொள்ளலாம்.

குரல் :2, குயில் 22–12–59 இசை :24

* * *

கேட்: திருக்குறளுக்கு நீவிர் எழுதும் வள்ளுவர் உள்ளம் என்ற உரை எளிய முறையில் இல்லை. படித்தவர்க்கே புலப்படும் முறையில் அமைந்திருக்கிறதே, அதற்கு நீவிர் கூறும் விடை என்ன?

பா. சு. மணி, மதுரை.

கிளத்: எளிய முறையில் எழுதியிருக்கின்றேன். அது படித்தவர்க்கு மட்டும்தான் புரியுமென்றால் படிக்காதவர்களைப் படித்தவர்கள் என்று ஆக்குவதுதான் எப்போது? இப்போது நான் கையாண்டுள்ள முறையில் பக்கங்கள் மிகுதியாய் வேண்டியிராது. நீவிர் கேட்கும் முறையில் எழுதினால் பக்கங்கள் மிகுதியாக வேண்டியதிருக்கும் என்பதையும் உணர வேண்டும்.

கேட்: பெருநிலக் கிழாரிடமிருந்து பெரும்பான்மை நிலங்களைப் பிடுங்கி நிலமில்லார்க்கு வழங்குவதோர் அரசினர் திட்டம் பற்றி நாளேடுகள் அனைத்தும் எதிர்ப்பதற்கு காரணம் என்ன?

வேலாயுதம், மறைக்காடு

கிளத்: பெரும்பாலும் நாளேடுகள் உள்ளோர்கள் அனைவரும் பெருநிலக்கிழாரும், தன்னல உணர்ச்சி உடையவர்களும், தமிழ்நாடு உடையவர் கருமுத்துவைப் பற்றி உமக்குத் தெரியுமே. அவர் அத்திட்டத்தை எப்படி வரவேற்பார்.

கேட்: தி.மு.க. தாழ்ந்து வருகிறது என்பதற்கு என்ன சான்று?

தண்டபாணி, சென்னை.

கிளத்: அது பிற கட்சிகளைத் துணைக்கு அழைக்கிறது. தி.மு.க. விற்கு ஓர் இலக்கத்துக்கு மேல் கட்டட நிதி குவிந்து வருகிறது—என்ன பொருள்?

கேட்: கம் — சுதந் — தி.மு.க. மூன்றும் இணைந்து விட்டால் காங்கிரசு பாடு அரோகரா தானே?

முத்து, விருதை.

கிளத்: சென்ற பொதுத்தேர்தலில் இம்மூன்றும் காங்கிரசை எதிர்த்தன. என்ன கிழித்து விட்டன? இன்னமும் இம்மூன்றும் சேர்ந்து எதிர்த்தால் என்ன ஆகும்? மூன்றுக்கும் கோவிந்தா தான்!

கேட்: குடும்பக் கட்டுப்பாடு, அதாவது, மிகுதியாக மக்களைப் பெறாதிருக்கும் திட்டம் எப்படியாகும்?

நீ. சந்திரன், ஈரோடு.

கிளத்: திட்டம் வெற்றி பெற்று வருகின்றது. மிகுதியாக வெற்றிபெற வேண்டும். சிலர், சில ஏடுகள் அதை எதிர்க்கலாம். முட்டையிடும் கோழிக்

குத்தான் வருத்தம் தெரியும் முட்டையை அப்பத்தில் ஊறவைத்து சுட்டுத் தின்பவர்களுக்குத் தெரியுமா?

கேட்: நாவலர், கணக்காயர், டாக்டர் சோமசுந்தர பாரதியார் உருவச்சிலை அமைக்க வேண்டுமா?

முருகன், முத்தாலுப்பேட்டை.

கிளத்: அவருக்கு மட்டுமன்று திரு.வி.க., வ.உ.சி., மறைமலையடிகள், இசைப்பேரரசு இராசரத்தினம் ஆகியோர் உருவங்கள் தமிழகத்து நகர் தோறும், மன்றங்கள் தோறும், பல்கலைக் கழகங்கள் தோறும் காட்சியளிக்க வேண்டும். அரசினர் இம் முயற்சியை ஆதரிக்கமாட்டார்கள். அவர்கள் போக்கு அனைத்தும் தில்லியை மகிழ்விக்கத் தமிழை கொலை செய்வதிலும் தமிழைக் காட்டிக் கொடுக்கும் தெ.பொ.மீ.க்களை ஆதரிப்பதிலுந்தான் இருக்கும். பொதுமக்களே எடுத்துச் சொல்ல வேண்டிய அரும்பணிகள்.

கேட்: மத பக்தியை விட்டுத் தமிழை வளர்க்கிறேன் என்று சொன்னால் அது தமிழே ஆகாது. அப்படிப்பட்டவனும் தமிழை அறியாதவனே ஆவான் என்று பக்தவத்சலனார் கூறினார். உங்கள் கருத்தென்ன?

வேணு, சென்னை.

கிளத்: தமிழ் பிடிக்காது; சைவம்தான் பிடிக்கும் என்னும் தம்பிரான் கட்சிக்காரர் பக்தவத்சலனார், அது மட்டுமல்ல, பக்தவத்சலனார்க்குத் தமிழ் தெரியாது.

கேட்: இராஜகோபால் ஆச்சாரி கால்பந்து ஆடலிலும் குண்டு (கோலி) விளையாடல் நல்லது என்கிறார். சரியா? பினாகபாணி, வேலியூர்

கிளத்: எதற்கும் ஏட்டிக்குப் போட்டி பேசுவதின் மூலமே தம் கட்சி முன்னேற்றமடைந்து விடும் என்று அவர் எண்ணுகின்றார். ஆச்சாரியால் ஒன்றும் முடியாது. இப்படி, உளறிக்கொண்டிருப்பதோடு சரி.

குரல் : 1 குயில் 29-12-1959 இசை: 25

* * * *

கேட்: முப்பாலாக வெளிப்பட வகுத்துக் கூறிய நாயனாரை வீடும் கூறினார் என்றால் எங்ஙனம் பொருந்தும்? திருக்குறளுக்கு முப்பால் என ஒரு பெயரும் உளதன்றோ?

அ. ஒளிச்செங்கோ, தஞ்சை.

கிளத்: நக்கீரனார்,

தானே முழுதுணர்ந்து தண்டமிழின்
வெண்குறளாம்
ஆனா அறுமுதலா அந்தநான்கும்-ஏனோருக்கு
ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்
வாழிஉலகு என்ஆற்றும் மற்று? [கும்

என்று திருவள்ளுவ மாலையிற் செப்பியுள்ளார். அதனால் குறளால் வள்ளுவர் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் நவின்றமை தெளிக

இன்னும் மாமூலனாரும்,

அறம்பொருள் இன்பம்வீ டென்னும்அந்
நான்கின்
திறம்தெரிந்து செப்பியதேவை— மறந்
தோயும்
வள்ளுவன் என்பான்ஓர் பேதை
அவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார்.

என்று திருவள்ளுவ மாலையிற் செப்பியுள்ளார். இதனால் குறளில் சொல்லப்பட்டவை நான்கும் என்பது பெற்றாம்.

மற்றும் கீரந்தையார்,

நப்பா முதற்பாவால் நாம்மாண்ட
பாடலினால்
முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்
—எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனம்மகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

என்றதால் திருக்குறளில் திருவள்ளுவர் மூன்று பாலை விரித்ததன் வாயிலாக நான்கு பாலையும் நவின்ற திறம் வியக்கத் தக்கதாவது அறிக.

மேலும், நரிவெரூஉத்தலையார்,

இன்பம் பொருள்அறம் வீடென்னும்
இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்
மன்பதைகட்கு
உள்ள அரிதென்று அவைவள்ளுவர், உலகம்
கொள்ள மொழிந்தார் குறள்.

என்றார். இதன் பொருளையும் கேட்க! இன்பம் பொருள் அறம் வீடு என்றும் இந்நான்கினையும்—முக்காலத்தில் மக்கள் அறியும்படி சொல்லியருளிய முதுமொழி நூல்—முதுமைப்பட்ட தமிழ் மொழியாலான தமிழ் நான்மறை என்ற நூலானது மக்கள் மனதிற் கொள்ளல் அரிதாகும் என்று அவைகளை வள்ளுவர், உலகம் கொள்ள எளிதாகுமாறு மொழிந்தார். எதை?—குறளை!

மற்றும் கோவூர்கிழார்,

அறமுதல் நான்கும் அகலிடத்தோ
ரெல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளியக் —குறள்
வெண்பாம்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே
ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

இதிலும் வள்ளுவர் அறமுதல் நான்கையும் சொன்னமை தெளிக!

இனியும், இழிகட் பெருங்கண்ணனார்,
''இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியிற் றெளிவுபெற
—மும்மையின்
வீடு, அவற்றின் நான்கின் விதிவழங்கா
வள்ளுவனார்,
பாடினார் இன்குறள்வெண் பா.''

இதனாலும் வள்ளுவர் நாற்பாலும் நவின்றமை நன்கு புலப்படும்.

நக்கீரரும், நால்வரும் அறமுதலா நான்கினையும் ஆலின் கீழிருந்து சிவபெருமான் அருளிச் செய்தனர் எனத் தம் பாடற்களிற் பல்லிடங்களிலும் சொல்லப்படுவது தமிழ் நான்மறையே. சிவன் சொன்னது என்றது சிறப்புறுத்தியது.

தமிழ் நான்மறை மறைந்தது ஆதலின் அதை மீண்டும் கொணர்ந்தது திருக்குறள் எனத் தெளிதல் வேண்டும்.

எனவே முப்பால் எனினும், அது நாற்பாலை உள்ளிட்டதே எனக் கொள்க!

இனி, திருக்குறளில் வீட்டு நெறியைக் குறிப்பால் உணருமாறு உரைத்துள்ளமை அறியற்பாலது.

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

முதலிய மிகப்பல வீட்டு நெறியை விளக்குவனவே!

குரல் : 2 குயில் 5-1-60 இசை : 26

* * * *

கேட்: தொல்காப்பியம் என்ற நூலைச் செய்தவர் தமிழரா?

கிளத் : இப்போது நம்மிடம் இருக்கும் தொல்காப்பியப் பதிப்பிலுள்ள நூற்பாக்கள் அனைத்தையும் ஒருவரே செய்தார் என்று கொண்டால் அவர் தமிழராயிருக்க முடியாது. ஆனால் பேராசிரியர் வெள்ளை வாரணனார் போன்றோர் எண்ணுவது போல் தொல்காப்பியத்தில் சில நூற்பாக்களை இடைச்செருகலாகக் கொண்டால் அந்த நூல் தூய தமிழனால் அருளப்பட்டதே யாகும்.

கேட்: சென்னைக் கோயம்பேட்டுக்கு அருகில் வந்து கொண்டிருந்த மக்கள் இயங்கி வண்டி (பஸ்) ஒரு கூட்டத்தாரால் மறித்து நிறுத்தப்பட்டது. மேற்பார்வையாளர் (கண்டாக்டர்) வெளியில் இழுத்தெறியப்பட்டார். ஓட்டுவார் கத்தியால் குத்தப்பட்டார். இந்த அடிதடியில் 12 பேர் குருதி தெறிக்கும் புண்பட்டார்கள். இனியும் இவ்வாறு நடவாதிருக்க என்ன செய்யலாம்?

கிளத்: ஓட்டுபவர் போர்வீரர் ஆதல்வேண்டும். அவர் அண்டையில் போர்க்கருவிகள் இருக்க வேண்டும். ஆனால் இப்போது புண்பட்டால், அடிபட்டால் தொடக்க மருத்துவத்திற்கான மருந்து

வைக்கப்பட்டிருக்கிறது. போதாது நாம்சொல்லும் திருத்தம் அனைத்தும் நடைமுறைக்கு வருங்காலம் இயங்கிகளின் போக்குவரவுகளையெல்லாம் அரசினர் எடுத்து நடத்துங் காலமாகும்.

கேட்: ஆதாரக் கல்வி என்பது என்ன?

கிளத்: வாழ்க்கைக்கு ஆதாரமான (அடிப்படையான) அறிவை உண்டாக்கும் கல்வியைக் கற்றலும் கற்பித்தலுமாகும். இப்போது அரசினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் முறை ஆதாரக் கல்வி எனத் தோன்றவில்லை. காட்டுமிராண்டிக்சல்வி என்றுதான் சொல்லவேண்டும். இந்தமுறைதான் ஏற்றது நல்லது என்று மக்களிடையே இன்று குழப்பம் செய்கின்றவர்கள்—தலைவர்கள்—கல்வி அதிகார்கள் அனைவரும் காட்டுமிராண்டிகள் அல்லர். நல்ல முறையில் கற்றவர்களே.

மாணவர் வடித்த சிறுநீரைச் சேகரித்து, அதைத் தூக்கிக் கொண்டுபோய் வேண்டிய இடத்தில் பயன்படச் செய்ய வேண்டும்.

நெல்லை மரப்பொறியால் அரைக்க வேண்டும். பிறவும்.

இவைகள் அனைத்தும் ஆதாரக் கல்வியிற் சேர்ந்தவை. மற்றும் ஆதாரக் கல்வி பற்றி வெளியாகும். பாடநூற்களும் ஆரியன் ஒருவன் மாணவன் கட்டை விரலை வெட்டிக் காணிக்கை கொண்டான் என்பது போலத்தான் இருக்கும்.

தமிழ் மட்டும் இங்கு நன்றாக கவனிக்கப்படுகிறது. எப்படி? தமிழ் தெரியாதவர்களால் பாடநூல் வெளியிட வேண்டும் என்பது கட்டாயம்.

தமிழர் பண்பாடு ஒழிக்கப்பட வேண்டிய வலுக் கட்டாயம்.

குரல் : 2 குயில் 26–1–60 இசை : 28

* * * *

கேட்: தூத்துக்குடி இடைத்தேர்தலில் கண்ணீர்த்துளி தோற்றது வியப்பல்லவா?

கிளத்: தோற்றது வியப்பல்ல. தோற்கும்படி கண்ணீர்த்துளியே கண்ணீர்த்துளிக்கு மறைமுகமாகக் குழி தோண்டியதுதான் வியப்பு.

கேட்: கல்லூரிப் படிப்பில் எல்லா பாடங்களையும் தமிழிலேயே கற்பிப்பது என்பது என்று அரசியலார் மேற்கொண்டுள்ள முயற்சி உறுதியாக வெற்றி பெறும் என்று அமைச்சர் சுப்பிரமணியம் சொல்லுகிறார். எப்படி?

கிளத்: அரிய பெரிய கண்டுபிடிப்பு.

கேட்: உலகில் நுண் ஆய்வின் பயன் மிகுதியாயிருந்தாலும் போர் விளைவு இன்னும் இருந்துகொண்டுதானிருக்கிறது. நுண்ணாய்வினர்க்கு அதைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் ஏற்படவில்லை என்று பெங்களூர் நுண்ணாய்வினோர் கழகத்தில் உருசியத் தலைவர் ஒரோசிலோவு பேசியது எப்படி?

கிளத்: தொல்லையுள்ளத்துக்குச் சிறியதோர் ஆறுதல்.

கேட்: இந்தச் சலசலப்புக்குப் பணிந்து விடமாட்டேன் என்று பிரெஞ்சு டிகால் அல்சீரியாவை நோக்கிக் கூறுகின்றார். சலசலப்புக்காரர் யார்?

கிளத்: பிரெஞ்சு வெள்ளைக்காரர் பிரஞ்சின் கீழ் இருந்த அல்சீரியாவில் குடியேறிப் பெருவாழ்வு வாழ்ந்து வருகின்றார்கள். டிகால், அந்த அல்சீரியாவுக்கு விடுதலை கொடுத்துவிட்டால் பெரு வாழ்வு வாழ்ந்து வந்த பொறுக்கிகளுக்கு இடையூறு நேர்ந்துவிடும். டிகாலையே எதிர்த்துச் சலசலப்புக் காட்டுகிறார்கள்.

கேட்: கேரளத்தில் கூட்டணி வெற்றி பெறுமா?

கிளத்: சென்ற தேர்தலில் கேரளப் பொதுவுடைமைக்காரர்கள் மக்களுக்காகப் பல வாக்குறுதிகள் கொடுத்திருந்தார்கள். மக்கள் சீட்டுப் போட்டார்கள். பொதுவுடைமைக்காரர்கள் ஆட்சி அடைந்தபின் கொடுத்த வாக்குறுதிகளின்படி நடக்காதது மட்டுமல்லாமல், மக்களின் எதிர்ப்பாற்றல்களுக்கே ஆதரவு கொடுத்தார்கள். ஓர் எடுத்துக்காட்டு : அயலாரால் பிடுங்கிக் கொள்ளப் பட்ட பல தொழில்களைப் பொதுவாக்குவோம் என்றவர்கள், அப்படிச் செய்யாததோடு, அந்த அயலார் கையை வலுப்படுத்தினார்கள். இப்படி ஒன்றல்ல; நூறு. இதனால் மக்களுக்கேற்பட்ட வெறுப்புதான் சட்டமன்றமே கலைக்கப் படக் காரணமாயிற்று. காங்கிரசும் பிற கட்சிகளும் சேர்ந்து கூட்டணிதான் வெல்லும்.

கேட்: கேரளத்தில் நம்பூத்திரி நம்பூத்திரி என்று பெருமை அடித்துக் கொண்டிருந்த தமிழ் நாட்டின் உச்சிக் குடுமிகள், அப்பூத்திரி அவிந்து போவது பற்றி என்ன? நினைக்கின்றார்கள்?

கிளத்தல் : நம்பூத்திரி எரிந்துவிட்டது. வேறு கம்பி மத்தாப்பின் பக்கம் சேர்ந்து கொள்ளத்தாமே நினைப்பார்கள்.

குயில்— 2-2-60

* * * *

கேட்டல் : 'இரப்பாரை இல்லாத ஈர்ங் கண்மா ஞாலம் மரப்பாவை சென்று வந்தற்று.'

என்று கூறிய வள்ளுவர், இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான் என்றும் கூறினார்.

இதனால் திருவள்ளுவரை முன்னுக்குப்பின் முரண்படக் கூறினார் என்று அறிவுடையார் எண்ணுவாரன்றோ!

கிளத்: எண்ணினால் அது அவர் பிழை!

கூழுக்கு வழியில்லை என்று இரப்பவனும் இரப்பவனே. சுவை நீர் அருந்தப் பாலுக்கு வழி யில்லை என்று சின்ன படியால் ஒரு படிப்பால் இருந்தால் கொடுங்கள் என்று இரப்பவனும் இரப் பவனே.

நாட்டில் விளைவில்லை ஓர் இலக்கம் கலம் நெல் கொடுங்கள் என்னும் நாடுடையானும் இரப் பவனே என்பதை முதலில் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது :

இரப்பாரை இல்லாத என்ற செய்யுள் மேற் சொன்ன இரப்பவர் எல்லாரையும் பொதுவாகச்

சொன்னதென்ன அறிதல் வேண்டும். அதுமட்டு மன்று; அது ஈவோருக்குப் படும்படி சொன்னது மாகும்.

'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்' என்ற செய்யுள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத கூழும் இல்லையே என்று இரப்பவனைப் பற்றி சொன்னது என அறிதல் வேண்டும். (அதனால் தான் உயிர் வாழ்தல் என்று பாட்டிற் குறிப்பிட் டார்.)

அவ்வாறு அறிந்து கொண்டால் மட்டும் போதாது. அது இரப்பவர்க்கு விழிப்பூட்டச் சொன்னதென்று அறிதல் வேண்டும்.

இதனால் வள்ளுவர் அறிவுடைமை பொரு ளுடைமை முதலிய எல்லாவற்றிலும் சிறிதும் உயர்வு தாழ்வு வேண்டாம் என்று கருதினாரல்லர் என்பது பெறப்படும். இனி,

'ஓடப்பர் உதையப்பர் ஆகிவிட்டால் ஒப்பப் பர் ஆய்விடுவார்; உணரப்பா நீ'

என்று நாம் கூறியதும் இதைத்தான். உதை கொடுத்தால் செல்வர்க்கு ஒப்பு ஆய்விடுவார் என் றோமே தவிரச் செல்வரே ஆய்விடுவார் என்று நாம் சொல்லவில்லை. செல்வர்க்கு ஒப்பு ஆவது வேறு. செல்வரே ஆய்விடுவது தவறு. முகத்திற்குத் தாமரை ஒப்பு என்றால் தாமரை எல்லா வகை யாலும் முகமே ஆகிவிடுவதில்லை. அப்படி ஆகும் என்றால் ஒப்பு என்ற உவமை உருபு வேண்டிய தில்லை.

558
திருச்சிராப்பள்ளி
6 2 ... 24
... பல்கலைக் ...

(ஒப்புக் கூறுவது சில) வகையால் ஒத்திருப் பதைக் கொண்டுதான், தாமரை மாலை கட்ட உதவும் முகமோ அப்படி? முகத்தில் கண்கள்